**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண்.132/2021**

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. S. சரண்யா, எம்.எல்., சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சங்கர் கணேஷ் | த/பெ.: | ராமச்சந்திரன் |
| கிராமம்: | | தாலுக்கா: | |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | | முகவரி: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 08.07.2022

**வா.சா.1 ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக 12.01.2019 தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த ரூபாய் ஐந்து லட்சத்திற்கான கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஆகும். 08.09.2020 தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகும். 23.09.2020 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதிலறிப்பு வா.சா.ஆ.3 ஆகும். பிரதிவாதி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆகும். எனவே தாவாப்படி தீர்ப்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.